## பிடபத்தர பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 03 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிடபத்தர பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்த்தல்

2005 திசெம்பர் 01 திகதிய 1421/26 ஆம் இலக்க இலங்கை சனநாயக குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பிடபத்தர பிரதேச சபை அமைக்கப்பட்டிருந்த போதும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 223 இன் கீழ் காட்டப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு இணங்க கொடபொல பிரதேச சபை மற்றும் பிடபத்தர பிரதேச சபை இடையே சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை தீர்ப்பதற்காக 2011 ஆகஸ்ட் 17 கணக்காய்வு திகதி வரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.4.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரியதாக விடுவிப்பதற்கு இடமளிக்கப்பட்ட ரூபா 28,797 தொகையான பெறுமதிசேர் வரித்தொகை வருமானச் செலவினக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் மிகை மற்றும் குறைவுக் கணக்கிற்கு நாட்குறிப்பு பதிவு 39 இன் மூலம் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டணத்திற்காக ரூபா 1,965,530 தொகை குறைவாக நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ஆதனக் கடனுக்காக ரூபா 74,055 தொகையான அரசாங்க பங்களிப்பு, கிடைக்க வேண்டிய ஆதனக் கடன் வட்டிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் ஏனைய உதவிக் கணக்கிற்கு நாட்குறிப்புப் பதிவு 50 இன் மூலம் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு கொட்டபொல பிரதேச சபையினால் கையளிக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணிப்பீடு செய்து மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிக் கூற்றுக்களில் நீண்ட காலமாக பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,979,028 தொகையான கடன்மீதி பிழையாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நூலகப் புத்தக இருப்புக்களின் பெறுமதி ரூபா 1,874,306 தொகையாக இருந்த போதும் பயன்பாட்டு பதிவேடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 1,880,115 ஆக இருந்தமையினால் வேறுபாடு ரூபா 5,809 ஆக இருந்தது.

(எ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் கடன் மீதி ரூபா 1,466,344 ஆக இருந்த போதிலும் பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 1,595,504 ஆக இருந்தமையினால் வேறுபாடு ரூபா 129,160 ஆக இருந்தது.

### 1.4.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிமைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,131,360 ஆகும்.

### 1.4.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) 08 கணக்கு விடயங்களை சேர்ந்த ரூபா 52,837,191 தொகை பெறுமதியான மீதிகளுக்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள், உளமையை

உறுதிப்படுத்தும் ஆவணங்கள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு போன்றவை காணப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) பொதுக் களஞ்சிய இருப்புக் கணக்கில் ஏற்பட்ட வேறுபாட்டிற்காக ரூபா 45,324 தொகை நாட்குறிப்புப் பதிவு இல. 60 இன் மூலம் செலவிலும் மிகை பற்றாக்குறைக் கணக்கிற்கு வரவிலும் பதிவுகள் இடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான விளக்கமளித்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாண ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக சுருக்க கையெழுத்து இடுவதன் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனினும் முறைப்படி அவ் விடயம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீரிக்கப்பட்ட செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான மீதி இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் பற்றிய காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | விதி 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீது மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | நி.பி. 507 | கையிருப்பு பொருட்களின் பெறுமதி வருடாந்தம் கணக்குகளில் உட்படுத்துவதற்காக வருட இறுதித் தினத்தில் உள்ளவாறு பௌதீக மெய்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டு நிலையான சொத்தக்களின் உளமை பற்றிய கூற்றொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 திகதிய திறைசேரி சுற்றுநிருப இலக்கம் ஐஏஐ/2002/02 | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 65,574 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 379,895 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக வருமானங்கள், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 பெப்ரவரி 23 திகதிய

எனது கடிததத்தின் மூலம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிழையாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை வருமானம் 2010 ரூபா. | நிலுவை வருமானம் 2009 ரூபா. | அதிகரிப்பு சதவீதப்படி % | குறைதல் சதவீதப்படி % |
|---|---|---|---|---|
| வீதவரி மற்றும் ஏக்கர் வரி | 207,890 | 180,090 | 15.44 | - |
| வாடகை | 2,350,311 | 1,075,504 | 118.53 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 70,522 | 72,272 | - | 2.42 |
| ஏனையவை | 17,864,807 | 12,864,226 | 38.87 | - |

**2.2.2 நிலுவை ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் அறவிடவேண்டியிருந்த ரூபா 207,890 தொகையான ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி என்பன 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்**

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதி மன்றங்களினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்து பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 445,407 இற்கான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

**2.2.4 முத்திரைக் கட்டணம்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 1,342,793 இற்கான முத்திரைக் கட்டண வருமானம் கிடைக்க வேண்டியிருந்தது.

**2.2.5 ஒரே தடவையில் சொத்தும் பணத்தை அறவிடாமை**

மீளாய்வாண்டின் இறுதிவரையில் 04 வாராந்த சந்தைக் கடைகளிலிருந்தும் ஒரே தடவையில் செலுத்தும் தொகையான ரூபா 150,000 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் கணக்குகளிலும் வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 தொலைபேசி/ மின்சார தொடர்பு தூண்களுக்கான கட்டண அறவீடு

சபை அதிகாரப் பிரதேசத்தில் இணைக்கப்பட்டிருந்த தொலைபேசி/ மின்சார இணைப்புக்களின் 08 தூண்களிலிருந்தும் நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானியின் (V) ஆம் பட்டோலையின் 6(V) இன் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி காப்பு அங்கீகாரம் வழங்கும் போது செயன்முறைக் கட்டணங்களாக ரூபா 493,360 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்ததுடன் இணக்கச் சான்றிதழ் விநியோகித்தல் கட்டணமாக ரூபா 42,500 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீடு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின விடயம்** | **பாதீட்டு** | **உள்ளவாறான** | **முரண்** | **பாதீட்டு** | **உள்ளவாறான** | **முரண்** |
| **மீண்டுவரும் செலவுகள்** | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 10,475 | 8,836 | 1,639 | 10,387 | 8,387 | 2,000 |
| ஏனையவை | 7,661 | 3,899 | 3,762 | 6,437 | 5,245 | 1,192 |
| உப கூட்டுத் தொகை | 18,136 | 12,735 | 5,401 | 16,824 | 13,632 | 3,192 |
| மூலதன செலவுகள் | 70,085 | 14,635 | 55,450 | 69,890 | 9,984 | 59,906 |
| மொத்தக் கூட்டுத் | 88,221 | 27,370 | 60,851 | 86,714 | 23,616 | 63,098 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியினர் தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது |
|---|---|---|
| பதவி நிலைத் தரத்தினர் | 02 | 02 |
| இரண்டாம் தரத்தினர் | 12 | 09 |
| ஆரம்ப தரத்தினர் | 17 | 16 |
| ஏனைய (அமைய, தற்காலிக) | - | 18 |
| | 31 | 45 |

(ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறுவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 18 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,551,789 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் சம்பளப் பதிவேட்டின் பிரகாரம் பதவியணினரின் சம்பள மற்றும் சபை உறுப்பினர்களின் படிகள் என்பவைகளுக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 8,836,156 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ரூபா 7,947,000 தொகை

மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபை நிதியத்திற்கு ரூபா 889,156 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவேட்டின் பிரகாரம் அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,466,344 ஆகும்.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.6.1 ஆர்எஸ் - 1126 ஆம் இலக்க பெகோ இயந்திரம்

2007 ஆம் ஆண்டில் ரூபா 5,000,000 தொகைக்கு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இவ் இயந்திரம் 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பன செலுத்தியதன் பின்னரான கிரயம் ரூபா 6,122,247 தொகையானதுடன் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 3,981,762 ஆகும்.

(அ) மீளாய்வாண்டில் இந்த இயந்திரத்திற்காக பழுதுபார்த்தல், எரிபொருள், சாரதி சம்பளம், கடன் தவணைப் பணம் மற்றும் வட்டிச் செலவுகள் என்பன ரூபா 2,461,706 ஆக இருந்தது. எனினும் இயந்திரத்தை வேலையில் ஈடுபடுத்தியமை தொடர்பான பதிவேடு எரிபொருள் இடல், பராமரிப்பும் பழுதுபார்த்தலும், வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு விடல் போன்றவைகள் தொடர்பாக முறையான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பன செலுத்தப்பட்டதன் பின்னர் இயந்திரத்தின் பெறுமதி ரூபா 6,122,247 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் பெறுமதி ரூபா 7,300,000 எனக் காண்பிகக்ப்பட்டமையினால் வேறுபாடு ரூபா 1,177,753 ஆக இருந்தது.

### 2.6.2 வீதி விளக்கு பராமரித்தல்

-------------------------------------------

மீளாய்வாண்டில் மின்சார உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்தலுக்காக ரூபா 135,010 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(அ) மீளாய்வாண்டில் வீதி விளக்குகள் பராமரிப்புக்காக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கையொன்றில் உடன்பட்டிராதிருந்தமையினால் சபை நிதியத்திலிருந்து செய்யப்பட்ட செலவினங்களை மீளளிப்புக் செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) வீதி விளக்குகள் பராமரிப்பிற்கான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யும் போது தேவைகள் மற்றும் பொருத்த வேண்டிய மின்குமிழ் வகை, பொருத்த வேண்டிய இடங்கள் தொடர்பான மதிப்பீடுகளைச் செய்யாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**2.6.3 பிரதேச சபை உறுப்பினர்களின் உத்தேசங்களும் செயல் முன்னேற்றமும்**

-------------------------------------------------------------------------------------------------------------------------

10 உறுப்பினர்களைக் கொண்ட பிட்டபெத்தர பிரதேச சபையில் மீளாய்வாண்டில் நடைபெற்ற 12 சபை அமர்வுகளிலும் மூன்று உறுப்பினர்கள் மாத்திரமே தொடர்ந்து சமுகமளித்திருந்ததுடன் 09 உறுப்பினர்கள் சபைக் கூட்டங்களில் இடையிடையே சமுகமளித்திருந்தனர். கூட்டக் கொடுப்பனவுகளாக சகல உறுப்பினர்களுக்கும் ரூபா 678,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

--------------------------------------------------------------

**கூட்டக் கொடுப்பனவுகள் செலுத்துதல்**

---------------------------------------------------------------

தென்மாகாண பிரதம அமைச்சு மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரின் 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1413/15 ஆம் இலக்க வர்த்தமானியின் 3(1)(l) ஆம் பந்தியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கூட்டக் கொடுப்பனவுகள் செலுத்தும் போது உரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபைக் கூட்டம் மற்றும் செயற்குழுக் கூட்டங்கள் என்பவைகளுக்கு சமூகமளிக்காதிருந்தால் அம் மாதத்தின் கூட்டக் கொடுப்பனவுகளைச் செலுத்த முடியாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் சனவரி, மார்ச், ஏப்ரல், மே, யூன், ஆகஸ்ட் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காத 07 சபை உறுப்பினர்களுக்கு ரூபா 95,000 தொகையான கூட்டக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகளி தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்